2008 ஏப்ரல் 3]

அனைத்துப் பயணிகளுமே அதைத்தான் விரும்புகிறார்கள். ஒவ்வொரு ஊருக்குள்ளும் பேருந்துகள் சென்று வருகின்றபோது பயண நேரம் அதிகமாகிற காரணத்தால் பயணிகள் ஊரின் நடுவே செல்ல விரும்புவதில்லை. ஓமலூரிலிருந்து சேலம் நகருக்கு, கேட்கின்ற அளவுக்கு தனிப் பேருந்தை விடுகிறோம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு ஏற்கெனவே உறுதியளித்திருக்கிறோம். இந்த ஆண்டு புதிய பேருந்துகள் வருகின்றபொழுது, நிறைய பேருந்துகளை அவர்களுக்கு அளித்து ஓமலூரிலிருந்து சேலம் வந்து, சேலத்திலிருந்து அவர்கள் ஓமலூர் செல்வதைப்போன்ற வசதி ஏற்படுத்தித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 44, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

44—

தொழிற்பேட்டை

***9612—திருமதி பெ. கமலாம்பாள்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் தொகுதியில் தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் தொகுதியில் புதிய தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள்.

திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் சென்றால் காலாட்டிச் சாப்பிடலாம் என்று சொல்வார்கள். அதாவது, யார் வந்தாலும் நெசவுத் தொழில் செய்து

[2008 ஏப்ரல் 3

பிழைக்கலாம் என்று சொல்வார்கள். அப்படிப்பட்ட நெசவுத் தொழில் நசிந்து, நெசவாளர்கள் பாதிக்கப்பட்டு கஷ்டப்படுகிறார்கள். காஞ்சிபுரம் பட்டு, உலக அளவில் பெயர்போனது. காஞ்சிபுரம் கிராமங்கள் விவசாயத்திற்குப் பெயர்போனவை. அதுபோல, காஞ்சிபுரம் தொகுதியிலுள்ள கிராமங்கள் ஏரிகள் நிறைந்தவை. தற்போது ஏரி, கிணறுகளில் நீராதாரம் குறைந்து விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. அதேபோல, தங்கம், ஜரிகை, கோரா பட்டு விலை அதிகரித்த நிலையில் நெசவுத் தொழிலும் பாதிக்கப்பட்டுள்ளது. மக்கள் பல கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளாகியுள்ளார்கள். விவசாய நிலங்களையும் ரியல் எஸ்டேட்காரர்கள் வாங்கிப் போட்டுவிட்டார்கள். அதனால் கிராமத்திலுள்ள விவசாய மக்களும், நெசவாள மக்களும் வேலை கிடைக்காமல், ஸ்ரீபெரும்புதூரில் உள்ள தொழிற்சாலைகளுக்கு வேலைக்குச் சென்று வருகிறார்கள். நெசவுத் தொழிலாளர்கள் பலர் கட்டட வேலை, சமையல் வேலை, கூலி வேலைக்குச் செல்கிறார்கள். காஞ்சிபுரம் தொகுதியில் சிறு, சிறு தொழிற்பேட்டை, பெரிய தொழிற்பேட்டை அமைத்து தொகுதி மக்களுக்கு வேலைவாய்ப்புத் தரக் கோரி பல தடவை கேட்டுள்ளேன். மேலும் தமிழ் நாட்டிலேயே சுய உதவிக் குழுக்கள் அதிகமுள்ள தொகுதி காஞ்சிபுரம் தொகுதியாகும். அதனால் சுய உதவிக் குழுக்களில் உள்ள பெண்கள் தங்கள் சொந்தக் காலில் நிற்பதற்கு (மணியடிக்கப்பெற்றது) தொழிற் கூடங்கள் அமைத்து அதன்மூலம் தொழிற் பயிற்சி அளித்து, அவர்களுக்கு வேலைவாய்ப்பு தரக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி, தொழிற்பேட்டை வேண்டும். அவ்வளவுதானே?

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டத்தில், காஞ்சிபுரம், திருமுடிவாக்கம், மறைமலைநகர் மற்றும் ஆலத்தூர் ஆகிய நான்கு இடங்களில் சிட்கோ மூலம் தொழிற்பேட்டைகள் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றன. காஞ்சிபுரத்தில் அமைந்துள்ள தொழிற்பேட்டையில் 14 தொழிற்கூடங்கள் மற்றும் 64 தொழில் மனைகள் சுமார் 37.43 ஏக்கர் பரப்பளவில் உருவாக்கப்பட்டுள்ளன. இதில் அனைத்துத் தொழிற்கூடங்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. ஆனால், தொழில் மனைகளைப் பொறுத்தளவிலே 51 மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, மீதம் இன்னும் 13 மனைகள் ஒதுக்கீட்டுக்குத் தயாராக உள்ளன. இருந்தாலும்கூட,

2008 ஏப்ரல் 3]

தொழில் தொடங்க ஆர்வமாக உள்ள 20 தொழில் முனைவர்கள் தகுந்த தொழில்நுட்பப் திட்டங்கள் மற்றும் போதுமான நிதி ஆதாரங்கள் ஆகியவற்றுடன் திருப்பித் தரப்படாத ஒப்பளிப்புத் தொகையினைக் கட்ட முன்வந்தால், புதிதாகத் தொழிற்பேட்டை அமைப்பதற்கான நிலம், தொழில் முனைவோர் தேவை ஆகியவற்றைக் கணக்கில்கொண்டு, மாவட்ட ஆட்சியர், மாவட்ட தொழில் மையத்தினுடைய பொது மேலாளர், தொழில் முதலீட்டுக் கழக இயக்குநர் ஆகியோருடன் கலந்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத்திற்கேற்ப, தொழிற்பேட்டை ஆரம்பிப்பது பற்றி அரசு முடிவு செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. கமலாம்பாள்.

திருமதி பெ. கமலாம்பாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. செந்தில் பாலாஜி.

திரு. வே. செந்தில் பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர் சட்டமன்றத் தொகுதி, கரூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட மண்மங்கலம் ஊராட்சி, ஆத்தூர் பூலாம்பாளையம் ஊராட்சி ஆகிய இரண்டு ஊராட்சிப் பகுதிகளில் புதிய தொழில் பேட்டை அமைப்பதற்காக அரசின் சார்பில் சுமார் 450 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்துவதாகக் கூறி, நிலத்தை அதிகாரிகள் ஆய்வு செய்தபோது, அங்கே இருக்கின்ற விவசாயப் பெருமக்களால் மாவட்ட ஆட்சித் தலைவர் உட்பட பல அதிகாரிகளிடம் மனு கொடுக்கப்பட்டு அந்த நிலங்கள் விவசாய நிலங்களாக உள்ளன; அதனால் மாற்று இடத்தில் தொழிற் பேட்டை அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோரியுள்ளார்கள். எனவே, தமிழக அரசு மாற்று இடத்தில் தொழிற்பேட்டை அமைக்க நடவடிக்கை எடுக்குமா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் *9-55*

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த வாரம் நமது 'SIDCO' நிறுவன அதிகாரிகள், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன இடங்களுக்குச் சென்றபோது, விவசாயிகள் அந்த இடத்திலே தொழிற்பேட்டை அமைக்கவேண்டாமென்று சொன்னது உண்மை. வேறு இடத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவு செய்து காட்டினால், தொழிற்பேட்டை அமைக்க அரசு விரைவிலே நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 45, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

45—

மருத்துவமனைக் கட்டடம்

***9280—திருமதி ஜி. லதா:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குடியாத்தம் E.S.I. மருத்துவமனைக்குச் சொந்தக் கட்டடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) குடியாத்தம் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டும் திட்டம் ஏதும் தற்போது அரசிடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஜி. லதா, இருக்கையில் இல்லை. அவருக்கு மாற்றாக மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப்.

திரு. ஞா. ஜாண் ஜோசப்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருத்துவமனையைக் கட்டுவதற்குத் தேவையான